IA 02/2025 in O.S 48/2025

Dated : 06.11.2025

உத்தரவு:

| | |
|---|---|
| இரு தரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்/வாதி தரப்பில் இந்த வழக்கும் தாவா சொத்து குறித்து பாகப்பிரிவினை கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.<br><br>மேலும் மனுதாரர்/வாதி தரப்பில் இந்த மனுவும் தாவா ஆ அட்டவணைச் சொத்துக்கள் பாதைக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும், அந்த சொத்தில் பாதையை மறைத்து, இந்த 7ம் எதிர்மனுதாரர் புதிய கட்டுமானங்கள் கட்டி விட்டால் பாதை இல்லாமல், பெருத்த நஷ்டம் ஏற்படும் என்றும், அது சம்பந்தமாக தாவா ஆ அட்டவணைச் சொத்துக்களில் பூஸ்தி அமைப்பை பொறுத்து ஒரு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து, விரிவான அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய ஏதுவாக ஒரு நீதிமன்ற ஆணையரை நியமிக்க வேண்டி இந்த மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. | எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மனுவை அனுமதிக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை அனுமதிக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், இந்த அசல் வழக்கு பாக பிரிவினைக்காக, தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், மேலும், தாவா ஆ அட்டவணைச் சொத்தில் மனுதாரர் தரப்பில் கூறப்படுவது போல், பாதை உள்ளதா என்பது கண்டறிவதற்காகவும், வழக்கின் உண்மை நிலையை அறியும் பொருட்டும் ஒரு நீதிமன்ற ஆணையரை நியமிப்பது அவசியம் இந்த நீதிமன்றம் கருதுகிறது.<br><br>மேலும் இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிக்கு எவ்வித பாதிப்பும் குந்தகமும் ஏற்பட போவதில்லை என்பதாலும் தாவாச் சொத்தை அளப்பதற்கு ஒரு ஆணையரை நியமனம் செய்வது அவசியம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.<br><br>இறுதியாக வழக்கறிஞர் திரு.K.விக்னேஷ்வரன் அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்படுகிறார். மனு சொத்தை அளப்பதற்கு முன்பு இரு தரப்பினர்களுக்கும் முறையாக அறிவிப்பு கொடுத்து, மனு சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தை ஆவணங்களின் அடிப்படையில் அளந்து, தாவாச் சொத்தின் சொரூபத்தை பார்வையிட்டு வரைபடம் மற்றும் புகைப்படம் ஆகியவற்றுடன் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.<br><br>நீதிமன்ற ஆணையர் ஊதியம் ரூ.7000/- மனுதாரர் நேரடியாக ஆணையருக்கு வழங்க உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க<br><br>M SATHATHUNISHA Digitally signed by M SATHATHUNISHA Date: 2025.11.06 14:41:09 +0530<br><br>மாவட்ட உரிமையில் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், இலுப்பூர். |